

தலைமைச் செயலகத்தில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடியிடம் நேற்று முன்தினம் (4.8.2023) தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகம் தேசிய தர மதிப்பீட்டில் A+ கிரேடு பெற்றதற்கான சான்றிதழை காண்பித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகப் பதிவாளர் (பொறுப்பு) முனைவர் சு.பாலசுப்பிரமணியன், தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழக இயக்குநர் தமிழ்மாறன் மற்றும் துணை இயக்குநர்கள் முனைவர் இ.குமார், திருமதி மீனாம்பிகை ஆகியோர் உள்ளனர்.



கனடா நாட்டின் பழமை வாய்ந்த டல்ஹவுசி பல்கலைக்கழகத்தில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் இருந்து புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களிடம் 03.08.2023 அன்று வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் கலந்துரையாடினார்.கலந்துரையாடல் நிகழ்வில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை செயலாளர் சி. சமயமூர்த்தி. தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர் திருமதி வி.கீதாலட்சுமி, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் திருமதி.இரா. பிருந்தா தேவி கனடா பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் பேராசிரியர் பிரித்விராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.

### மோடி ஆட்சியில் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் தலைவிரித்தாடுகிறது!

# இந்தியாவின் இளைஞர்கள் இருண்ட காலத்தை நோக்கிச் செல்கிறார்கள்!

## அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே குற்றச்சாட்டு!

புதுடெல்லி, ஆக. 6-

“மோடி ஆட்சியில் நாட்டில் வேலையில்லா திண்டாட்டம் தலைவிரித்தாடுகிறது. இந்தியாவின் இளைஞர்கள் இருண்ட காலத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர்” என்று அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே குற்றம் சாட்டியுள்ளார்.

அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டிருப்பதாவது:-

மோடி ஆட்சியில் கடந்த 5 ஆண்டுகளில் 12 லட்சத்து 20 ஆயிரம் வேலைகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. ஆண்டுக்கு 2 லட்சத்து 44 ஆயிரம் வேலை வாய்ப்புகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இந்த புள்ளி விவரங்கள் அனைத்தும் ஒன்றிய அரசின் வருங்கால வைப்பு நிதி தகவல்களின் அடிப்படையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.



ஆட்சிக்கு வந்தால் ஆண்டுக்கு 2 கோடி வேலை வாய்ப்பு என்ற வாக்குறுதி என்ன ஆனது?

இந்த வாக்குறுதிப்படி கடந்த 9 ஆண்டுகளில் 18 கோடி வேலை வாய்ப்புகள் உருவாகியிருக்க வேண்டுமே? நாட்டின் இளைஞர்கள் இருண்ட எதிர்காலத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறார்கள். தெருக்களில் கோபமும், வன்முறையும் நிலவுவதில் ஆச்சரியமில்லை

வேலைவாய்ப்பை வழங்குவதில் பா.ஜ.க. அரசு படுதோல்வி அடைந்துவிட்டது. கற்பனை கூட செய்ய முடியாத அளவுக்கு வேலையில்லாத் திண்டாட்டம், வலிமிகுந்த விலைவாசி உயர்வு மற்றும் பா.ஜ.கவால் தூண்டிவிடப்பட்ட வெறுப்பு ஆகியவைதான் இத்தகைய பேரழிவுக்கு காரணம்.

ஏழை மற்றும் நடுத்தர மக்கள் வாழ்வதற்கு, பா.ஜ.க.வை ஆட்சியிலிருந்து தூக்கி எறியவேண்டும்.

இவ்வாறு அப்பதிவில் அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.

### முதலமைச்சர் ஆகஸ்ட் 18 அன்று மீனவர்களைச் சந்தித்து

# மீனவர்களின் கோரிக்கையினை முழு அளவில் நிறைவேற்றித் தர உள்ளார்!

## அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் தகவல்!

இராமநாதபுரம், ஆக.6-

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் 03.08. 2023 அன்று மீன்வளம், மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், தலைமையில், மாவட்டக் கழகச் செயலாளர், இராம நாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்ஷா முத்து ராமலிங்கம், பரமக்குடி சட்டப்பேரவை உறுப்பினர் செ .முருகேசன், ஆட்சித்தலைவர் பா. விஷ்ணு சந்திரன், முன்னிலையில் மீனவர்களுடனான கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது.



இந்நிகழ்ச்சியில் மீன்வளம், மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், மீனவர்களின் கோரிக்கை குறித்து கேட்டறிந்து தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு 18.08.2023 அன்று வருகை தந்து மீனவர்களுடனான மாநாட்டு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மீனவர்களின் கோரிக்கைகளை நேரடியாக சந்தித்து கேட்டறிவதுடன் வங்காள விரிகுடா பகுதியில் மீன்பிடி தொழிலையே பிரதான தொழிலாக இருந்து வரும் மக்களுக்கு எந்த வகையிலும் பாதிப்பு ஏற்படாத வகையில் பாதுகாத்து நலன் காக்கும் முதலமைச்சராக தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் இருந்து வருகிறார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அன்றைய தினம் மீனவர்களுக்கான பல்வேறு நலத்திட்டங்களை வழங்க உள்ளார்கள். அதன் முன்னேற்பாடாக இன்று இராமநாதபுரம் மாவட்ட மீனவர்கள் சங்க பிரதிநிதிகளை சந்தித்து அவர்களிடம் முக்கிய தேவைகளை குறித்து கேட்டறிந்த நிலையில் 20க்கும் மேற்பட்ட கோரிக்கைகள் முன்வைத்துள்ளார்கள். அதில் குறிப்பாக மீன்பிடி இறங்கு தளத்தில் உட்கட்டமைப்பு மேம்படுத்துதல், டீசல் மானியம் உயர்த்தி தர வேண்டுதல், மீன்பிடி தடைக்காலம் நாட்களை குறைக்க வேண்டுதல், இலங்கை அரசால் பிடிக்கப்படும் படகுகளை மீனவர்களுடன் சேர்த்து விடுதலை செய்ய வோர்டுதல், மீனவர்களுக்கான ஓய்வூதியம் வயது வரம்பை உயர்த்துதல், அரசு நலத்திட்டங்களுக்கான விண்ணப்பங் கள் பதிவு முறை இணையதளத்தில் ஏற்படும் தவறுகளை உடனுக்குடன் சரி செய்திட வேண்டுதல், நீண்ட நாளாக மீனவர்கள் குடியிருக்கும் பகுதியில் மீனவர்களுக்கு வீட்டு மனை பட்டா வழங்க வேண்டுதல் போன்ற கோரிக்கைகள் முன்வைத்த தில் இணைய தளத்தில் பதிவேற்ற முறையில் ஏற்பட்டுள்ள தவறுகளை சிறப்பு முகாம் அமைத்து ஒருவார காலத்திற்குள் சரி செய்து அரசு நிவாரணத் தொகை பெறாதவர்களுக்கு வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதேபோல் மீன் இறங்கு தளம் மற்றும் மீனவர் குடியிருப்பு பகுதிகளில் மீன்வளம் மீளவர் நலத்துறையின் மூலம் உயர் மட்ட மின் விளக்குகள் அமைத்து தரப்படும், சாலை வசதிகள், குடிநீர் குழாய் இணைப்புகள் மாவட்ட நிர்வாகம் மூலம் செய்து கொடுக்கப்படும். மேலும் மீனவர்களுக்கான முக்கிய கோரிக்கைகள் மற்றும் முக்கிய திட்டப் பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்க உள்ளார்கள். எனவே 18.08.2023 அன்று நடைபெறுகின்ற மீனவர்கள் மாநாட்டில் குடும்பத்தினருடன் வந்து கலந்து கொண்டு தங்கள் தேவைகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் பெற்று பயனடைய வேண்டுமென மீன்வளம், மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், தெரிவித்தார்.

தொடர்ந்து தங்கச்சி மடம் கடற்கரை பகுதியில் புதிய மீன்பிடி இறங்குதளம் அமைப்பதற்கும் மற்றும் குந்துகால், நாலுபனை, பாம்பன் பகுதியில் உள்ள மீன்பிடி இறங்குதளத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது குறித்தும் மீன்வளம், மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்நிகழ்ச்சியில் , இராமநாதபுரம் நகர்மன்ற தலைவர் ஆர்.கே.கார்மேகம், துணை தலைவர் டி. ஆர், பிரவீன் தங்கம், இராமேஸ்வரம் நகர் மன்ற தலைவர் நாசர் கான், செயற்குழு உறுப்பினர் மிஷா அகமது தம்பி, ஒன்றிய செயலாளர்கள் மண்டபம் முத்துக்குமார், நிலோபர் கான், கடலாடி மாயகிருஷ்ணன், இராமநாதபுரம் ஒன்றிய குழு தலைவர் கே.டி.பிரபாகரன, டாக்டர் பி. கே. குமார், தலைமை பொறியாளர் மீன்பிடி துறைமுகம் வி.ராஜா , மாவட்ட வருவாய் அலுவலர் த இரா.கோவிந்தராஜலு , கூடுதல் காவல் கண்காணிப்பாளர் காந்தி , உதவி ஆட்சியர் (பயிற்சி) சிவானந்தம், மீன்வளத்துறை துணை இயக்குநர்கள் பிரபாவதி , காத்தவராயன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் ரவிச்சந்திர ராமவன்னி, மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர், கிளைக் கழக நிர்வாகிகள் கட்சித் தொண்டர்கள் மற்றும் அரசு அலுவலர்கள், மீனவர்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான

# மாநில ஆணையத்திற்கு உறுப்பினர் நியமனம்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, ஆக. 6-

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களின் சமூகப் பொருளாதார மற்றும் கல்வி வளர்ச்சிக்காக தமிழ்நாடு அரசு பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில், மாநில அளவில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆகியோருடைய சட்டபூர்வமான உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்களுடைய முக்கியமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், ‘தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையம்’ என்கிற புதிய அமைப்பு ஒன்றைத் தன்னாட்சி அதிகாரத்துடன் செயல்படுத்தும் வகையில் உருவாக்கிட உரிய சட்டம் இயற்றப்படும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் விதி எண் 110ன் கீழ் அறிவிக்கப்பட்டு அதற்கான உரிய சட்டமும் இயற்றப்பட்டது (தமிழ்நாடு சட்டம் 17/2021). இச்சட்டம் 13.10.2021 முதல் அமலுக்கு வந்தது.

இவ்வாணையம் நீதியரசர் பி.ஆர்.சிவகுமார், சென்னை உயர்நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி அவர்கள் தலைமையில் செயல்பட்டு வருகிற நிலையில் தற்போது காலியாக உள்ள ஒரு உறுப்பினர் பணியிடத்தில் திருமதி ஜெ.ரேகா பிரியதர்ஷினி அவர்களை நியமனம் செய்து அரசு ஆணையிட்டுள்ளது. மேலும், புதியதாக நியமனம் செய்யப்பட்ட உறுப்பினரின் பதவி காலம் மூன்று ஆண்டுகள் ஆகும் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

### முதல்வரிடம் நிதி ஒப்படைப்பு! கலைஞர் நூற்றாண்டு பன்னாட்டு மாரத்தானில்

# 73,206 பேர் பங்கேற்கின்றனர்! அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பரிசுகள் வழங்குகிறார்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, ஆக.6-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (4-8-2023) சென்னை, நந்தனம் ஒய்.எம்.சி.ஏ., மைதானத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமையன்று (6-8-2023) நடைபெற இருக்கும் கலைஞர் நினைவு பன்னாட்டு மாரத்தானில் பதிவு செய்தவர்களுக்கு ரன்கிட்-களை வழங்கினார்.

அப்போது செய்தியாளர்களிடம் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்ததாவது:-

ஆரோக்கியமான தமிழகத்தை - வலுவான அடுத்த தலைமுறையை உருவாக்கிடும் நோக்கில் இளைஞர்களிடையே உடற்பயிற்சிக்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் கலைஞர் நினைவாக மாரத்தான் பேட்டிகள் நடத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் 2020-ஆம் ஆண்டு கோவிட் பெருந்தொற்றுக் காலமாக இருந்ததால் கலைஞர் நினைவு பன்னாட்டு மெய்நிகர் மாரத்தானாக நடத்தப்பட்டது. இம்மாரத்தான் தேசிய, ஆசிய சாதனைப் படைத்தது அந்த மாரத்தான் போட்டியில் ரூ.300 பதிவுக்கட்டணமாக பெறப்பட்டதில் வரி நீங்கலாக ரூ.23,41,726/ அன்றைக்கு அ.தி.மு.க அரசு நிதி துறை செயலாளராக இருந்த கிருஷ்ணன் அவர்களிடம் பேரிடர் நிவாரண நிதியாக ஒப்படைக்கப்பட்டது.

2021-ஆம் ஆண்டு மீண்டும் இதேபோல் ஒரு மெய்நிகர் மாரத்தான் கலைஞர் நினைவு பன்னாட்டு மெய்நிகர் மாரத்தான் போட்டி நடத்தப்பட்டது. இதில் பதிவுக்கட்டணமாக பெறப்பட்ட தொகை ரூ.56,02,693/. இந்த தொகையை தமிழ்நாட்டின் முதலமைச்சர் தளபதி அவர்களிடம் கொரோனா பேரிடர் நிவாரண நிதியாக வழங்கப்பட்டது.

2020-2021-ஆம் ஆண்டு மெய்நிகர் மாரத்தானாக நடத்தப்பட்டது. கடந்த ஆண்டு இந்த மாரத்தான் அனைவரும் ஒரே இடத்தில் பங்கேற்கும் வகையில் பன்னாட்டு மாரத்தானாக நடத்தப்பட்டது. இந்த மாரத்தானில் 43,231 பேர் பங்கேற்று ஓடினார்கள். இது ஆசிய சாதனையாக அன்றைக்கு அங்கீகரிக்கப்பட்டதன் சான்றிதழ்கள் தமிழக முதலமைச்சர் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இம்மாரத்தானிலும் ரூ.300 ரூபாய் பதிவுக்கட்டணம் பெறப்பட்டது. அதில் கிடைத்த தொகை 1,22,02,450/ தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

**இன்றைய சாதனை!**

இந்தாண்டு கலைஞர் நூற்றாண்டு பன்னாட்டு மாரத்தான் போட்டி ஞாயிற்றுக்கிழமையன்று காலை 4 மணிக்கு தொடங்குகிறது. இந்த ஓட்டத்திற்கான பதிவை கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னாள் இளைஞர் நலன் மற்றும் மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். கடந்த 20-ஆம் தேதி பதிவு முடிவுக்கு வந்தது. இந்த மாரத்தானில் 73,206 பேர் கலந்துகொள்ள உள்ளனர். இப்போட்டி கின்னஸ் சாதனைப் படைக்க இருக்கிறது. அதற்கான அனுமதி பெறப்பட்டிருக்கிறது. அந்த அமைப்பின் நிர்வாகிகள் நாளை சென்னை வரவிருக்கின்றனர். காலை 4 மணிக்கு தொடங்கி 7.30 மணிக்கெல்லாம் இந்த சாதனை படைக்கவிருக்கிறது. *Largest Running Race* எனும் மாரத்தான் சாதனைப் படைக்க இருக்கிறது.

அதிகாலை 4.30 மணிக்கு 42 கி.மீ. மாரத்தான் போட்டி நடைபெற இருக்கிறது. இதில் 671 பேர் பங்கேற்கவிருக்கின்றனர். நகர்ப்புற உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் இதை தொடங்கி வைக்கிறார். சரியாக 5.30 மணிக்கு 21.கி.மீ., 10 கி.மீ., 5 கி.மீ., போட்டிகள் நடைபெற இருக்கிறது. 21 கி.மீ. மாரத்தானில் 1991 பேரும், 10 கி.மீ. மாரத்தானில் 6,240 பேரும், 5 கி.மீ. மாரத்தானில் 64,714 பேரும் பங்கேற்கவிருக்கின்றனர். இதில் ஆண்கள் 50,629 பேரும், பெண்கள் 21,514 பேரும் பங்கேற்று ஓடவிருக்கின்றனர். உலகிலேயே முதன்முறையாக திருநங்கைகள், திருநம்பிகள் 1063 பேர் பங்கேற்று ஓடி இதுவும் ஓர் சாதனையாகப் படைக்க இருக்கின்றனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடத்தில் தொடங்க இருக்கின்றனர். சரியாக 7.30 மணிக்கு 8க்குள் தீவுத்திடலில் முடிக்க உள்ளனர். 5 கி.மீட்டரை பொறுத்தவரையில் வாலாஜா சாலை, சிவானந்தா சாலை, நேப்பியர் பாலம், தீவுத்திடலில் நிறைவடைய இருக்கிறது. 10 கி.மீ. பொறுத்தவரை கலைஞர் நினைவிடத்தில் தொடங்கி காமராஜர் சாலை, லைட்ஹவுஸ் சென்று யூடேர்ன் செய்து, வாலாஜா சாலை, நேப்பியர் பாலம், தீவுத்திடலில் நிறைவடைய இருக்கிறது.

21 கி.மீ. கலைஞர் நினைவிடம் தொடங்கி காமராஜர் சாலை, பட்டினப்பாக்கம் உட்புற சாலை, எம்.ஆர்.சி நகர், தொடர்ந்து சத்யா ஸ்டியோ யூ டேர்ன் செய்து, அதே மாதிரி திரும்பி வந்து, தீவுத்திடலில் வந்தடைகிறது. 42 கி.மீ. முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடத்தில் தொடங்கி 21 கி.மீ. சாலையை கடந்து, சத்யா ஸ்டியோ சென்று முத்து லட்சுமி பார்க் அருகில் சென்று, பெசன்ட் நகர் எலியட்ஸ் பீச், பெசன்ட் மாசா சர்ச் ஆலயம், நேராக அங்கிருந்து ஓ.எம். ஆர். சாலையில் அப்பல்லோ வரை சென்று எம்.ஜி.ஆர். சாலையில் யூ டேர்ன் செய்து, அதே வழியில் திரும்பி வந்து தீவுத்திடலில் 42 கி.மீ நிறைவடைய இருக்கிறது.

**9 பிரிவுகளில் பரிசுகள்**

நான்கு பிரிவுகளாக நடைபெற இருக்கின்ற இந்த மாரத்தானில் 9 பிரிவுகளாக பரிசுகள் வழங்கப்பட இருக்கிறது. 42 கி.மீ., 21 கி.மீ., பிரிவுகளில் ஓட இருப்பவர்கள் மூன்று பரிசுகள் ரூ.1,00,000/, 50,000/ 25,000/ என்று பரிசுகள் வழங்கப்பட இருக்கிறது. 10 கி.மீ., மூன்று பரிசுகள் ரூ.50,000/, ரூ.25,000/, ரூ.15,000/ வழங்கப்பட இருக்கிறது. 5 கி.மீ., மூன்று பரிசுகள் ரூ.25,000/, ரூ.15,000/, ரூ.5,000/ என்று பரிசுகள் அறிவிக்கப்பட்டு இருக்கிறது. ஒவ்வொரு பிரிவிலும் ஆண், பெண் என்று ஓட இருக்கிறார்கள். திருநங்கை களுக்கும் பரிசுகள் என்ற வகையில் மொத்தம் ரூ.10,70,000/ பரிசுகள் வழங்கப்பட இருக்கிறது.

இந்தப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் 7.30 மணியளவில் பரிசுகளை வழங்க இருக்கிறார்கள். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஏற்கெனவே பதிவைத் தொடங்குகிற போது அறிவித்தார். இம்மாரத்தானில் பங்கேற்று ஓடுகிற திருநங்கை களுக்கு தி.மு.க. இளைஞர் அணி சார்பில் ஒவ்வொருவருக்கும் ரூ.1000/ வழங்கப்படும் என அறிவித்தார். அதன்படி அந்த தொகை அவர் களுக்கு வழங்கப்பட இருக்கிறது.

விழா மேடையில் முதலமைச்சர் அவர்களோடு, இங்கிலாந்து, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, பிரான்ஸ், ஜப்பான், ஜெர்மன், சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து போன்ற நாடுகளின் தூதர்கள் பரிசளிப்பு நிகழ்ச்சியில் பங்கேற்க இருக்கின்றனர். ரூ.3.42 கோடி ரூபாய்

**முதல்வரிடம் ஒப்படைப்பு!**

கடந்த ஆண்டுகளைப் போலவே பதிவுக்கட்டணத் தொகை பல்வேறு நலத்திட்டங்களுக்காக தமிழ்நாடு அரசிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்தாண்டைப் பொறுத்தவரையில் திருநங்கைகளுக்கான பதிவுக்கட்டணம் ரூ.100 என்று அறிவிக்கப்பட்டது. மற்றவர்களுக்கான பதிவுக்கட்டணமாக ரூ.500 என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த கட்டணத்தில் வரிபிடித்தம் போக ரூ.3 கோடியே 42 லட்சம் ரூபாய் வருகிறது. அந்த தொகையை விழா மேடையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் ஒப்படைக்க இருக்கிறோம்.

கடந்த ஆண்டைப் போலவே முதலமைச்சர் அவர்களிடம் ஒரு வேண்டுகோளை வைக்க இருக்கிறோம். இராயப்பேட்டை அரசு பொதுமருத்துவமனைக்கு புற்றுநோயினால் பாதிக்கப்பட்டு வருகிறவர்களுக்குத் தேவையான கட்டிடம் ஒன்று,கட்டுவதற்கு இந்த தொகையோடு நமக்கு நாமே திட்டத்தில் ஒரு இரண்டு மடங்குத் தொகை கிடைக்கும் என்கிற வகையில் இந்த கோரிக்கையை வைக்க இருக்கிறோம்.ரூ.10 கோடி செலவில் ஒரு புற்று நோய்க் கட்டிடம் கட்டப்பட இருக்கிறது.

புற்றுநோயாளர்களுக்கு பயன்பட இருக்கிறது. அந்த வகையில் இந்த மாரத்தான் என்பது சிறப்புக்குரிய ஒன்றாக நாளை மறுநாள் நடைபெற இருக்கிறது. இந்நிகழ்வில் புதுக்கோட்டை ராஜலட்சுமி செந்தில் இசை நிகழ்ச்சி நடைபெற உள்ளது. முடிவடைகிற இடத்தில் அனைவருக்கும் காலை சிற்றுண்டி வழங்கப்பட உள்ளது. 20க்கும் மேற்பட்ட மருத்துவ வாகனங்கள், பிசியோதெர பிஸ்ட்கள் 50 பேர் பங்கேற்க உள்ளனர். சென்னை மாநகர காவல்துறையினர் சிறப்பாக செயல்படுகின்றனர்.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.


## ‘வாட்ஸ் அப்’ பில் வந்த செய்தி!

